# ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவோடு இருந்திருந்தார்கள்

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

அப்போஸ்தலர் 4:13 பேதுருவும் யோவானும் பேசுகிற தைரியத்தை அவர்கள் கண்டு அவர்கள் படிப்பறியாதவர்களென்றும் பேதைமையுள்ளவர்களென்றும் அறிந்தபடியினால் ஆச்சரியப்பட்டு, அவர்கள் இயேசுவுடனே கூட இருந்தவர்களென்று அறிந்து கொண்டார்கள்.

*செய்தி:* **தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி**, ஜூலை 19, 1954

17. இப்பொழுது, நல்லது, பிரசங்கம் பண்ணுவதைப் போல, நாம் (இதை) பொருத்திக்காட்ட - கூற விரும்புகிறோம். நல்லது, ஜான் டோ அவர்களோ அல்லது யாராவது பிரசங்கம் பண்ணுகிறார்... ஜான் டோ அவர்கள்

ஒரு பிரசங்கியாராக இருக்கும்படி முற்றிலுமாக தேவனால் அழைக்கப்பட்டிராவிட்டால், அவர் ஒருபோதும் ஒரு வெற்றிகரமான பிரசங்கியாக இருக்கவே மாட்டார். அவர் ஒரு பிரசங்கியாக இருக்க வேண்டுமென்று, அவருடைய தாயார் அவரிடம் கூறியிருக்கலாம், அவருடைய தகப்பனார் ஒரு வேதாகமக் கல்லூரிக்கு அவரை அனுப்பியிருக்கலாம், அவருக்கு பட்டங்களும் மற்றவைகளும் இருக்கலாம்; ஆனால் பரிசுத்த ஆவியானவர் அம்மனிதருடைய ஜீவியத்திற்குள் வந்து, அவருக்கு ஏதோவொன்றைக் கொடுக்கும் மட்டுமாக, அவரால் ஜனங்களை தேவனிடம் வழிநடத்த ஒருபோதும் முடியவே முடியாது... அவரால் தம்முடைய வார்த்தைகளைச் சரியாகப் பேச முடியாமல் இருக்கலாம்; அவருக்கு சரியான இலக்கணமும் இல்லாமல் இருக்கலாம்; அவரால் சரியான வேதசாஸ்திரத்தை உபயோகிக்கவும் முடியாமல் இருக்கலாம்; ஆனாலும் அவருடைய ஜீவியத்தில் தேவனுடைய வல்லமை இருக்குமானால், ஜனங்கள் அதை அறிந்து கொள்வார்கள். அது சரியே. தேவன் அவரோடு கூட இருப்பார்.

நல்லது, அதே காரியம் தான், ஜான் டோ ஒரு கல்வி கற்ற மனிதராக இருக்கலாம், வேதசாஸ்திரத்தையும் மற்ற எல்லாவற்றையும்

உடன் கொண்டிருக்கலாம், ஆனால் அவரால் செய்தியை பண்ண முடியாது, கர்த்தரால் அழைக்கப்பட்ட அந்த ஏழை படிப்பறிவில்லாத மனிதனோ.

இப்பொழுது, நமக்கு அது தெரியும். நீங்களும் கூட அதை ஒப்புக்கொள்ளலாம், ஏனென்றால் நம்முடைய மிக மகத்தான ஊழியக்காரர்கள் அம்மாதிரியான மனிதர்களாகத்தான் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக, ட்வைட் மூடியின் மூலமாக, சிகாகோவில் நடந்த சென்ற எழுப்புதலில், ஒரு - மகத்தான எழுப்புதலைக் (கூறலாம்). அவர் அதிகமாக கல்வி அறிவற்ற ஒரு மனிதராகத்தான் இருந்தார். அவருடைய இலக்கணம் மிகவும் மோசமாக இருந்தது, அது மிக மோசமாக இருந்தது. அவர் ஒரு சிறிய, வயதான காலணி (செருப்புத்) தைப்பவரே அல்லாமல் வேறல்ல. ஓ, நீங்கள் அவருடைய புத்தகங்களை வாசித்திருக்கிறீர்கள், ஆனால் ஆமாம், அந்த புத்தகங்கள் வேறு யாரோ ஒருவரால் எழுதப்பட்டவை தான், அவருடைய பிரசங்கங்கள் முழுவதுமே திருத்தி மேலும் சிறப்பாக எழுதப்பட்டவை தான். ட்வைட் மோடி ஒரு எழுதப்படிக்கத் தெரியாத மனிதராகவே இருந்தார்.

18. இயேசு கிறிஸ்துவுக்குப் புறம்பாக, எல்லா காலங்களிலும், மிகப்பெரிய பிரசங்கிகளில் ஒருவனாக இருந்த, பேதுரு, மிகப்பெரிய எழுத்தாளர்களில் ஒருவன், அவனுக்கு முன்பாக, அவனுடைய சொந்த பெயர் எழுதப்பட்டிருந்தாலும், அதுவும் கூட அவனுக்குத் தெரியாமல் இருந்தான். யோவான், பேதைமையுள்ளவனாகவும், படிப்பறியாதவனாகவும், அதைப்போன்ற மற்றவைகளாகவும் இருந்தான், ஆனால் அவர்கள் இயேசு கிறிஸ்துவோடு இருந்திருந்தார்கள், வல்லமை உடைய ஒரு செய்தி அவர்களிடம் இருந்தது.

பேதுரு ஒருசில தடவைகள் யோவேலை மேற்கோள்காட்டி, ஒரே நேரத்தில் 3000 ஆத்துமாக்களை இயேசு கிறிஸ்துவுக்கு ஆதாயம் பண்ணினான். அதைக் குறித்து சிந்தித்துப் பாருங்கள்: அவன் பேதைமையுள்ளவனும், படிப்பறியாதவனுமாயிருந்தான்.

எனவே நீங்கள் பெரிய கல்விகளையும் அவைகளைக் குறித்த மிகப் பெரிய காரியத்திற்கும் போக வேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியது என்னவென்றால், இயேசுவை அறிந்து கொள்வது தான், அப்போது

அப்படிப்பட்டவைகளைச் செய்யும்படியாக, கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலமாக உங்களுக்கு திறமையைத் (ability) தந்தருளுவார்.

★★★★★

(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)